Addl. (Non-GST)
Chepauk
31 MAY 2022
Chennai-600 005
O/o the Commissioner of Commercial Taxes

<u>சுருக்கம்</u>

வணிகவரித் துறை – தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தீ விபத்துகளில் பாதிக்கப்படும் வணிக நிறுவனங்களுக்கு இழப்பீடு ரூ.5,000/–லிருந்து ரூ.20,000/–ஆக உயர்த்தி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத்(டி2)துறை</u>

அரசாணை (நிலை) எண். 87

நாள்: 30.05.2022
சுபகிருது, வைகாசி–16
திருவள்ளுவர் ஆண்டு 2053.
படிக்கப்பட்டன:

1. செய்தி வெளியீடு எண்.722, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, நாள் 05.05.2022.
2. கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையரின் கடித எண்.வநவா/68/2022, நாள் 18.05.2022.

-----

ஆணை:–

05.05.2022 அன்று திருச்சியில் நடைபெற்ற 39வது தமிழக வணிகர் விடியல் மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தீ விபத்துகளில் பாதிக்கப்படும் வணிகர்களுக்கான உடனடி இழப்பீடு 5,000 ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

2. அதனடிப்படையில் வணிகர் நல வாரியத்தில் நிரந்தர உறுப்பினராக பதிவு பெற்றுள்ள வணிகர்களுக்கு, தீ விபத்துகளில் பாதிக்கப்படும் வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் இழப்பீடு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு ரூ.5,000/–லிருந்து ரூ.20,000/– ஆக உயர்த்தி வழங்கலாமென மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்:–

1. வணிகர் நல வாரியத்தில் நிரந்தர உறுப்பினராகப் பதிவு பெற்றிருக்க வேண்டும்;
2. வணிகர் தீவிபத்து குறித்து முறையாக தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையிலிருந்து உரிய சான்று பெற்று சமர்பிக்க வேண்டும்; மற்றும்
3. உறுப்பினர் எவரும் வேறு எந்த நல வாரியத்திலும் பதிவு செய்து இழப்பீடு தொகை நல உதவித் திட்டம் எதுவும் பெற்றிருத்தல் கூடாது.

3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையரின் கருத்துருவினை ஏற்று, 5.5.2022 அன்று திருச்சிராப்பள்ளியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் நடைபெற்ற 39வது தமிழக வணிகர் விடியல் மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேலே பத்தி-2-இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, தீ விபத்துகளில் பாதிக்கப்படும் வணிக நிறுவனங்களுக்கான இழப்பீடுத் தொகை ரூ.5,000/-லிருந்து ரூ.20,000/-ஆக உயர்த்த அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசுச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர், சென்னை-5.
கூடுதல் ஆணையர்(வணிகவரி) / முதன்மைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை-5.
மாநில கணக்காயர் (கணக்குகள் மற்றும் உரிமைகள்), சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18.
(கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் வழியாக)

நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9
மாண்புமிகு அமைச்சரின் (வணிகவரி மற்றும் பதிவு) நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
அரசுச் செயலாளரின் தனிச்செயலர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
சென்னை-9.
நிதித்(வருவாய்) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/5/22
பிரிவு அலுவலர்
30/5/22